மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 03 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.17/2021
அ.வ.எண்.295/2014

1. கே.ராஜீ (இறந்துவிட்டார்)
2. லட்சுமியம்மாள்
3. கணேசன்
4. அர்ச்சுணன்
5. புஷ்பா
6. நர்மதா
7. கோகுலகண்ணன்
8. மகேஸ்வரி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. C.ராஜீ
2. D. செல்வம்
3. D. சின்னபையன்
4. கலா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 24.11.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.எஸ்.சுந்தரராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.அருணாசலம் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் வழக்கினை திருத்த அனுமதி வழங்க கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) மனுவின் சுருக்கம்</u> : –

1ம்வாதி/ராஜிகவுண்டர் 16.05.2017ல் 2 முதல் 8 மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார். அவர் இறந்தபிறகு வழக்கு நிலுவையில் இருந்து வருவதை அறிந்து இவ்வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டனர். 09.11.2021ல்

விசாரணைக்காக போடப்பட்டுள்ளது என வழக்கறிஞர் கூறியதன் அடிப்படையில் வழக்கு விபரம் குறித்து கேட்டபோது வழக்கறிஞர் அவ்வழக்கின் வாதுரையில் படித்துப் பார்த்து இச்சொத்து சம்மந்தமாக ஏற்கனவே பிரதிவாதிகள் தாக்கல் செய்த அ.வ.எண்.559/1995 என்ற வழக்கு இறந்துபோன ராஜிகவுண்டருக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக தீர்ப்பானதாக கூறினார். வழக்கின் தீர்ப்பானது மனுதாரர்களது அசல் சொத்துரிமையை ஏமாற்றும் நோக்கத்தோடு சில உண்மைகளை மறைத்து வாங்கப்பட்டுள்ளதால் அது மனுதாரர்களின் உரிமையை எள்ளளவும் கட்டுப்படுத்தாது. எனவே மனுவில் கூறியுள்ளவாறு வழக்கினை திருத்த அனுமதி கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 2ம்எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு 1, 3, 4ம்எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனுதாரர்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்த பிரிவு 5–ன் கீழான மனு மற்றும் கட்டளை 9 விதி 9–ன் கீழான மனுவிற்கு எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த பதிலுரையில் அ.வ.எண்.559/1995 வழக்கை பற்றி குறிப்பிட்டுள்ளனர். மேலும் அ.வ.எண்.559/1995 வழக்கில் சில வருடங்களுக்கு முன்பு மனுதாரர்கள் பிரிவு 5 மற்றும் கட்டளை 9 விதி 13–ன் கீழான மனுக்களையும் தாக்கல் செய்துவிட்டு தள்ளுபடிக்கு விட்டு விட்டனர்.

(ii) அ.வ.எண்.559/1995ல் இந்த மனுதாரர்களின் தந்தையான ராஜி என்பவரால் போர்ஜரியாக ஏற்படுத்தப்பட்ட 20.07.1989ம் தேதியிட்ட ஆவணம் 12.02.1996ல் செல்லாது என விளம்புகை செய்துள்ள நிலையில் அந்த செல்லாத ஆவணத்தை முன்னிலைப்படுத்தி தாக்கல் செய்த இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை மோசடியானது என திருத்தம் செய்ய கோரியுள்ள இம்மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் 20.07.1989ம் தேதியிட்ட கிரய ஆவணத்தை 12.02.1996ல் ரத்துசெய்துள்ள நிலையில் 8 வருடங்கள் கழித்து தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது குற்றமாகும். எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் 1ம்வாதி/ராஜிகவுண்டர் 16.05.2017ல் 2 முதல் 8 மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் எனவும், அவர் இறந்தபிறகு வழக்கு நிலுவையில் இருந்து வருவதை அறிந்து இவ்வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டனர் எனவும், 09.11.2021ல் விசாரணைக்காக போடப்பட்டுள்ளது என வழக்கறிஞர் கூறியதன் அடிப்படையில் வழக்கு விபரம் குறித்து கேட்டபோது வழக்கறிஞர் அவ்வழக்கின் வாதுரையில் படித்துப் பார்த்து இச்சொத்து சம்மந்தமாக ஏற்கனவே பிரதிவாதிகள் தாக்கல் செய்த அ.வ.எண்.559/1995 என்ற வழக்கு இறந்துபோன ராஜிகவுண்டருக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக தீர்ப்பானதாக கூறினார் எனவும், வழக்கின் தீர்ப்பானது மனுதாரர்களது அசல் சொத்துரிமையை ஏமாற்றும் நோக்கத்தோடு சில உண்மைகளை மறைத்து வாங்கப்பட்டுள்ளதால் அது மனுதாரர்களின் உரிமையை எள்ளளவும் கட்டுப்படுத்தாது எனவும், எனவே மனுவில் கூறியுள்ளவாறு வழக்கினை திருத்த அனுமதி கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்த பிரிவு 5ன் கீழான மனு மற்றும் கட்டளை 9 விதி 9–ன் கீழான மனுவிற்கு எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த பதிலுரையில் அ.வ.எண்.559/1995 வழக்கை பற்றி குறிப்பிட்டுள்ளனர் எனவும், மேலும் அ.வ.எண்.559/1995 வழக்கில் சில வருடங்களுக்கு முன்பு மனுதாரர்கள் பிரிவு 5 மற்றும் கட்டளை 9 விதி 13–ன் கீழான மனுக்களையும் தாக்கல் செய்துவிட்டு தள்ளுபடிக்கு விட்டு விட்டனர் எனவும், அ.வ.எண்.559/1995ல் இந்த மனுதாரர்களின் தந்தையான ராஜி என்பவரால் போர்ஜரியாக ஏற்படுத்தப்பட்ட

20.07.1989 ம் தேதியிட்ட ஆவணம் 12.02.1996 ல் செல்லாது என விளம்புகை செய்துள்ள நிலையில் அந்த செல்லாத ஆவணத்தை முன்னிலைப்படுத்தி தாக்கல் செய்த இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல எனவும், ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை மோசடியானது என திருத்தம் செய்ய கோரியுள்ள இம்மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல எனவும், மனுதாரர்கள் 20.07.1989 ம் தேதியிட்ட கிரய ஆவணத்தை 12.02.1996 ல் ரத்துசெய்துள்ள நிலையில் 8 வருடங்கள் கழித்து தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது குற்றம் எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) மனுவினை பரிசீலனை செய்ததில் வழக்குரையில் அ.வ.எண்.559/1995 வழக்கில் 1ம் வாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யாமல் 12.12.1996 ல் பெற்ற தீர்ப்பு மோசடியானது எனவும், அந்த தீர்ப்பு நடைமுறையில் இல்லை எனவும், தற்போதுவரை வாதிகள் தான் வழக்கு சொத்தினை அனுபவித்து வருகின்றனர் எனவும், மேற்படி தீர்ப்பு குறித்து இன்று தான் மனுதாரர்களுக்கு தெரிய வந்துள்ளது என திருத்தம் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iv) வழக்குரையை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கினை 1ம் வாதி K.ராஜீ அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு அவர் இறந்ததற்கு பின்னிட்டு 2 முதல் 8 வாதிகள் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும் வழக்குரையிலிருந்து அ.வ.எண்.559/1995 வழக்கில் 1ம் வாதிக்கு அழைப்பாணை சார்வாகவில்லை எனவும், 1ம் வாதிக்கு எதிராக 12.02.1996 ஒருதலைப்பட்ச தீர்ப்பு பெற்றதாக பிரதிவாதிகள் கூறி வருகின்றனர் எனவும், சுவாதீனம் வாதியிடம் தான் உள்ளது என வழக்குரை பத்தி 4, 5-ல் ஏற்கனவே கூறியுள்ளது தெரிய வருகிறது. அதே சங்கதியை தான் இந்த திருத்தல் மனுவிலும் மனுதாரர்கள் கோரியுள்ளது தெரிய வருகிறது. எனவே அ.வ.எண்.559/1995 வழக்கு குறித்து வழக்குரையில் சேர்க்கக் கோரிய திருத்தல் பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கதக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v) மேற்படி மனு திருத்தங்களில் வழக்கு சொத்தில் அனுபவமும், உரிமையும் தற்போதுவரை வாதிகள் வசம் உள்ளதாக திருத்தம் கோரியுள்ளது தெரிய வருகிறது. ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்கள் சுவாதீனத்தில் உள்ளதாக கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது. எனவே வாதிகள் சுவாதீனத்தில் உள்ளதாக கோரிய திருத்தமானது இருதரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்சினையை தீர்க்கும் வகையில் உள்ளது தெரிய வருகிறது. எனவே மனு திருத்தத்தில் பக்கம் 3–ல்

> "வாதியின் உரிமை ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகே வருவாய்த்துறையினர் 1ம் வாதிக்கு பட்டா எண்.263 ல் சர்வே எண்.124/4 சி–யில் பட்டா வழங்கியுள்ளனர். அதன் சிட்டா, அடங்கல் பதிவேடும் அவருடைய பெயரிலேயே வருவாய்த்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. வழக்கு சொத்தின் அனுபவமும் உரிமையும் இதுவரை வாதிகள் வசமே உள்ளது"

என்பதை பொறுத்து மட்டும் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் அ.வ.எண்.559/1995–யை குறித்து ஏற்கனவே வழக்குரையில் கூறியுள்ள நிலையில் மீண்டும் அது குறித்து திருத்தல் மனு தாக்கல் செய்து காலவிரையத்தை ஏற்படுத்தியுள்ளதாலும், தற்போது அனுமதிக்கக்கோரும் திருத்தங்களை வழக்கில் மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்கும் போதே சேர்க்க மனு தாக்கல் செய்யாததாலும், ஏற்பட்ட கால விரயத்திற்காக மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2000/– செலவுத்தொகையாக செலுத்தும்பட்சத்தில் இம்மனுவை பகுதியாக அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, அ.வ.எண்.559/1995 வழக்கு குறித்து மனுதாரர்கள் கோரிய திருத்தங்கள் அனுமதிக்கதக்கதல்ல எனவும், திருத்தல் மனுவில் பக்கம் 3–ல் 3 வது வரியில் வாதியின் என்ற இடத்தில் ஆரம்பித்து 9 வரியில் உள்ளது என முடியும் வரை உள்ள திருத்தங்களை மேற்கொள்ள மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2000/– செலவுத்தொகையாக 09.1212.2021 க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அழைக்க 10.12.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 03 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.